# ஆறுதலாகும் அழுகை...

## இரக்கத்தின் சிலுவைப் பாதை

அருட்பணி. **சுரேஷ்குமார்,** OCD



**ஆசியுரை**

தவக்காலம் : ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்தி வாழவைக்கும் அருமையான காலம். இரக்கத்தின் வேர் துளிர்விடும் காலம். இரக்கத்தின் சிலுவைப்பாதை என்னும் சிறு நூலின் வழியாக தஞ்சை கார்மெல் இளம் குருமடத்தின் இயக்குநர் தந்தை. சுரேஷ்குமார் OCD அவர்கள் தங்கள் ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்தி அருமையாக செபிக்க உதவியுள்ளார்கள். கோணலான வாழ்வை நேராக்கவும், கரடுமுரடான வாழ்வை சீராக்கவும், புரட்சிகரமாக துணிச்சலோடு செயல்பட்டு புனிதப்படுத்தவும் அவர் எடுத்திருக்கின்ற முயற்சியை பாராட்டுகின்றேன். இந்நூலைப் பயன்படுத்தி செபிக்கின்ற அனைவரும் உறுதியான வல்லமையோடு புனிதத்தில் வளர வாழ்த்துகின்றேன். குழந்தை இயேசு அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்...

அருட்பணி. **ஆ. வென்சஸ்லாஸ்** OCD

அதிபர்,

கார்மெல் குழந்தை இயேசு திருத்தலம்,
தஞ்சை.



## வாழ்த்துரை

மனிதன் இறைவனை உணர அடையாளங்களைப் பயன்படுத்துகிறான். இந்த அடையாளங்கள் மனித உணர்வு, உணர்ச்சி சிந்தனை, சொல், செயல் இவற்றை பாதிக்கும் ஆற்றல் கொண்டவை. இவ்வகையில் இந்த இரக்கத்தின் சிலுவைப் பயணம் சிந்தனைகளை சீராக்க, செபங்களைச் சிறப்பாக்க, செயல்களை சாத்தியப்படுத்த, சமுதாயத்தை சத்திப்படுத்த தொடர்ந்து தோள் கொடுக்க, சவால்களை சரித்திரமாக்க அமைக்கப்பட்ட ஒரு படைப்பாகும்.

நீங்கள் மாற்ற விரும்பும் மாற்றத்தை முதலில் உங்களில் நிகழ்த்துங்கள் என்ற கூற்றின்படி தன்னை மாற்றிக்கொண்டு மற்றவர்களில் மாற்றம் காண உதவ அழைக்கும் இப்பயணம் ஒரு வெற்றிப் பயணமாகும். தொடர்ந்து பயணிப்போம்.

அருட்தந்தை சுரேஷ்குமார் தனது சீரிய சிந்தனைகளாலும், இசையாலும் பல மனங்களைக் கொள்ளை கொண்டவர். “இவர் வழியாக இவரோடு இவரில் ” என்ற நூலோடு தொடங்கிய இவரது பயணம் கல்வாரி சிகரத்தை நோக்கி செல்கிறது. வெற்றியின் பயணமாக அமையும் என்ற நம்பிக்கை உண்டு. இவரது எழுத்துக்கு அழகும் உண்டு, ஆழமும் உண்டு. அழுத்தமாக, ஆழமாக, இனிதாக, உணர்வுப் பூர்வமாக, எழுச்சி பொங்கும் வகையில் தனது சிந்தனையை முன் வைக்கும் சிறந்த படைப்பாளர்.இந்த அடிப்படையில் “ஆறுதலாகும் அழுகை” என்ற இந்த இரக்கத்தின் சிலுவைப் பாதை பயணிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

விசுவாசத்தையும் உள்ளத்து உணர்வுகளையும் சீர்தூக்கி செம்மைப்படுத்தி சமுதாயத்தில் இயேசுவின் மதிப்பீடுகளை வாழ்ந்து காட்ட வழி வகுக்கும் இப்பாதை புனிதப்பாதை, வெற்றியின் பாதை, வாழ்வின் பாதையாக நாம் அமைத்துக் கொள்வோம்.

அருட்பணி. ஜான் ஜீலியட் OCD
பொருளாளர்,
கார்மெல் குழந்தை இயேசு திருத்தலம்,
தஞ்சை.



## நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து...

அன்பும் அமைதியும் அதிகமானால்
நம்மை ஏமாளி என்பார்கள்
பணிவும் பொறுமையும் அதிகமானால்
நம்மை கோழை என்பார்கள்
பகிர்வும் பாசமும் அதிகமானால்
நம்மை பைத்தியக்காரன் என்பார்கள்
வேகமும் விவேகமும் அதிகமானால்
நம்மை திமிர்பிடித்தவன் என்பார்கள்.

ஒட்டுமொத்தத்தில்...

மனிதரிடத்தில் இருக்க வேண்டிய எவையுமே
இல்லாதவர்களைத்தான் இன்று மனிதர்கள் என்கிறார்கள்.

மனிதர்கள் யாரென தீர்மானிப்பவர்களே மானங்கெட்டவர்களாக இருக்கிற பொழுது மனித விழுமியங்கள் தூக்கிலிடப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. பணமும் பதவியும், பெருமையும் புகழும், ஆட்சியும் அதிகாரமும், வீண்பேச்சும் வெறித்தனமும் கோலோச்சும் சமூகத்திலே அன்றாடங் காய்ச்சிகளும், அடித்தட்டு மக்களும் அவனியில் அகதிகளாவதில் அதிசயிப்பதில் அர்த்தமில்லை. எதைச் சாதிக்க இந்தப் போக்கு? கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்து அவராக வாழ்வதில் அடங்கியிருக்கிறது. தூக்கிப் பிடிக்க வேண்டியவற்றை பிடிப்போம்; தூக்கி எறிய வேண்டியவற்றை எறிவோம். அதுவே மனித நேயத்தின் அடித்தளம் என்பதை உணர்வோம்.


அழுகையை மட்டுமே ஆறுதலாகக் கொண்டிருக்கும் இயேசுவின் சின்னஞ்சிறியோர் ஒவ்வொருவருக்கும் இச்சிறுநூல் சமர்ப்பணம்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கி என்னை உற்சாகப்படுத்திய தஞ்சை கார்மெல் குழந்தை இயேசு திருத்தல அதிபர் பேரருள்திரு. வெண்சஸ்லாஸ் OCD அவர்களையும், இந்நூலுக்கு வாழ்த்துரை எழுதி உடனிருந்து தூண்டுதல் கொடுத்த திருத்தல பொருளாளர் அருட்தந்தை. ஜான் ஜீலியட்

OCD அவர்களையும், ஏனைய எமது இல்ல தோழமை குருக்களையும் அருட் சகோதரர்களையும், இந்நூலின் அச்சுப்பிரதிகளுக்கான செலவை ஏற்று அனைவரையும் சென்றடையச் செய்த தஞ்சை குழந்தை இயேசு திருத்தல கார்மெல் மூன்றாம் சபை அங்கத்தினர்களையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

வாருங்கள் பயணிப்போம்... இரக்கத்தின் பாதையில்...


செபங்களுடன்...<br>
அருட்தந்தை. P.சுரேஷ்குமார் OCD<br>
இயக்குநர்,<br>
கார்மெல் இளம் குருமடம்,<br>
குழந்தை இயேசு திருத்தலம்,<br>
தஞ்சாவூர்.<br>
போன் : 8973529930



# ஆறுதலாகும் அழுகை...
## இரக்கத்தின் சிலுவைப் பாதை

## முன்னுரை

ஆண்டவர் இயேசுவுக்கு இனிமையானவர்களே!

இயேசுவோடு ஒருமணிநேரம் பயணிக்க தயாராவோமா!

சிலுவைப் பாதை – இது சீர்திருத்தப் பாதை.

சிதறுண்ட இதயங்களை, சிதைக்கப்பட்ட இதயங்களை

சிகரத்தை நோக்கி வழிநடத்தும் சரித்திரப் பாதை.

இது புரட்சியாளன் புரட்டிப் போட்ட புனிதப் பாதை.

இது கோணலானவை நேராக்கப்பட வேண்டிய நீதிப் பாதை.

இது பள்ளங்களானவை நிரப்பப்படவேண்டிய நியாயப் பாதை.

இது கரடுமுரடானவை சமதளமாக்கப்பட வேண்டிய சமத்துவப் பாதை.

இது உலகத்தை நோக்கியப் பாதையல்ல;

மாறாக உள்ளத்தை நோக்கியப் பாதை.

மனித உறவுகளுக்காக உதிரம் சிந்தும் உன்னதப் பாதை.

சாரமற்ற சமூக சிந்தனைவாதிகளும்

போலியான பொருளாதார நிபுணர்களும்

ஆதாயம் தேடும் அரசியல்வாதிகளும்

ஆதிக்கம் நாடும் ஆன்மீகவாதிகளும்

ஒட்டுமொத்தத்தில், மனித நேயமற்ற மனிதர்களும் வாழும் இச்சமுதாயத்திலே.. உருவிழந்து... உறவை இழந்து... உரிமையை இழந்து அழுகையை மட்டுமே ஆறுதலாக கொண்டிருக்கும் அன்றாடங்காய்ச்சிகளோடு ஒரு அர்ப்பணப் பயணம். தூரநின்று தூசி தட்டாமல், தொடர்ந்து சென்று தோள்கொடுக்க இயேசுவோடு பயணிப்போமா?

முதல் நிலை

## திருத்தம் செய்யப்பட வேண்டிய தீர்ப்புகள்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம். ஏனெனில் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

"எங்களுக்கு ஒரு சட்டம் உண்டு
அச்சட்டத்தின்படி இவன் சாக வேண்டும்." யோவான் 19:7

***செய்தி :***

நீதியே இல்லாத மன்றம் நீதிமன்றம் ஆகிவிடுமா?

நீதிமன்ற தீர்ப்பு : இது வலியோருக்கு வசதியாக வளைகின்ற தென்னங்கீற்று. சிபாரிசுக்கு ஆள் இல்லாததால் இயேசுவுக்கு இந்த சிலுவைத் தீர்ப்பு. வறியவரின் வழக்கு என்றாலே நீதிமன்றத்திற்கு கூட முடக்குவாதம் வந்துவிடுகிறது. பொய் சாட்சி சொல்ல வாடகை மனிதர்கள் வரிசையில் நிற்கிறார்கள். விசாரனைக்குபின் தீர்ப்பு என்ற நிலைமாறி இயேசுவின் வழக்கில் தீர்ப்புக்கு பின் விசாரணை நடக்கிறது.

***நிகழ்வு :***

ஒரு விளம்பரதாரர் நிகழ்ச்சி : நீயா நானா? அன்பா – கண்டிப்பா? எது பலன்தரும்? காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருந்தது. காவல்துறை அதிகாரி ஒருவர் கண்டிப்பான அதிகாரியாக இருந்ததால்தான் எனது 25 வருட காவலர் பணியில் நிறைய சாதிக்க முடிந்தது என்றார். அனுபவமிக்க ஆசிரியர் ஒருவர் "மாணவர்களை கண்டிப்பாக நடத்தினால்தான் அவர்கள் படிக்கவே செய்கிறார்கள்" என்றார். இளம்பெண் ஒருவர், "கொஞ்சலும், கெஞ்சலும் தேவையில்லாதது" கண்டிப்பே பயன் தரும் என்று வாதிட்டார். இளைஞர் ஒருவர் பிறரை ஏமாற்றுவதற்கும் தங்கள் ஆதாயத்திற்காக "பிறரை பயன்படுத்தவுமே சிலர் அன்பாகக் பேசி நடிக்கிறார்கள்" என்றார். கண்டிப்பே சிறந்தது என்று காட்டமாக வாதிட்ட அந்த இளம் பெண்ணிடம், உங்களுக்கு அன்பான கணவர் வேண்டுமா? அல்லது கண்டிப்பான கணவர் வேண்டுமா? என்று கேட்டபோது, அந்தப் பெண் தலைகுனிந்தவளாய் வாய் நிறைய புன்னகையுடன் "எனக்கு அன்பான கணவர்தான் வேண்டும் என்று சொன்னாள்."



***சிந்தனைக்கு :***

- குற்றவாளிகள் விடுவிக்கப் படுவதும் நிரபராதிகள் தண்டிக்கப்படுவதும் இன்றைய எதார்த்தம்.
- 26.4 விழுக்காடு வழக்கில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்படுகின்றனர். தேசிய குற்றவியல் பதிவுத்துறை
- மற்றவர் குறையைக் காண்பதில் அரிப்பு கொண்டவர், அவருக்கு அரிப்பு, சிரங்கு அதிகமாகி கடைசிவரைக்கும் அந்த சிரங்கு ஆராமலேயே இருக்க வேண்டியதுதான் – புத்தபிரான்.
- பிறரை எடைபோடுவதில் காலத்தை வீணாக்காதீர்கள். ஏனெனில் அன்பு செய்ய நேரம் இருக்காது. – அன்னை தெரசாள்.
- வார்த்தைகளால் ஒருவரை குணப்படுத்தவும்முடியும், ரணப்படுத்தவும் முடியும். – இறையன்பு.

***செபம் :***

அன்பே உருவான இறைவா, நாங்கள் அனைவரும் பாவிகள் என்பதை உணரவும், அனைவரையும் ஏற்று அன்பு செய்யவும் யாரையும் தீர்பபிடாமல் மன்னித்து வாழவும் அருள்தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

---

இரண்டாம் நிலை

## சுமப்பது நிமிர்வதற்காகவே

திவ்விய இயேசுவே...

"என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து
சிலுவையைச் சுமந்து என்னைப் பின்பற்றட்டும்" லூக்கா 9:23

***செய்தி :***

சிலுவை சுமப்பதால் ஒருவர் குற்றவாளி ஆகிவிட முடியாது. இலட்சிய பேராளிக்கு சிறைக்கூடம் கூட பள்ளிக்கூடம் தான். சிலுவைச் சாவை மாற்ற முடியாது என்பதால் அல்ல, சிலுவை ஏற்பதாலே மாற்றம் மலரும் என்ற உறுதியான நம்பிக்கையால் இயேசு சிலுவையை ஏற்றுக்கொள்கிறார்.

சுமப்பது சுகங்களை சேர்க்கும்.. சோகங்களை போக்கும்

கற்பனைகளை சுமப்பவன் கவிஞனாக தலைநிமிர்வான்

நெஞ்சில் கருணையை சுமப்பவன் மனிதனாக தலைநிமிர்வான்

எண்ணத்தில் இறைவனை சுமப்பவன் புனிதனாக தலைநிமிர்வான்

***நிகழ்வு :***

மணிப்பூர் மாநிலம். இந்திய ராணுவத்தினரின் தொல்லைகளுக்கு உள்ளான மாநிலம். பல பெண்கள், சிறுமிகள் பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஷர்மிளா என்ற பெண் எங்களுக்கு சுதந்திர வாழ்வு வேண்டும்.. சுதந்திர ஆட்சி வேண்டும்... என்று போர்க்கொடி தூக்கினாள். தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டாள். இதனால் அவர் பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளாக நேரிட்டது! ஒட்டுமொத்த மாநிலத்தின் சுமையை சுமந்தாள் ஷர்மிளா. இன்றைக்கு மணிப்பூர் மாநிலத்தில் சுதந்திர ஆட்சி அமைய ஆணிவேராக இருந்தவர் ஷர்மிளா.

***சிந்தனைக்கு :***

- சொல்வது சுகமாகத்தான் இருக்கிறது. காரியம்தான் கசக்கிறது.
- இலட்சியம் பெரிதானால்.. சுமைகள் கூட சுகமாகும்.
- பிடித்தது கிடைக்கவில்லையென்றால்,கிடைத்ததை பிடித்துக்கொள்ள வேண்டும்.

***செபம் :***

இயேசுவே... பிறர்மீது பாரத்தை சுமத்தாமல், பிறர் பாரம் சுமக்கும் மனிதர்களாக பரிவையும் பாசத்தையும் கொடுத்து வாழ வரம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

---

**மூன்றாம் நிலை**

## தடுமாறலாம் தடம் மாறாதே...

திவ்விய இயேசுவே!

“அவர் நம் குற்றங்களுக்காக காயமடைந்தார்
நம் தீச்செயலுக்காக நொறுக்கப்பட்டார்.” எசாயா 53:5



***செய்தி :***

விழுவதால்தான் வீரனுக்கே விலாசம் கிடைக்கிறது. தாயகம் காக்க காயப்படுவதும் வீரம்தான். வீழ்ந்தால் வலியிருக்கும் அதிலிருந்து மீண்டால் வழி பிறக்கும். பாதங்கள் தடுமாறினாலும் அவரின் பாதைகள் தடம்மாறவில்லை. இயேசு விழுந்தாலும் அவரின்இலட்சியங்களுக்கு எந்த சேதாரமும் இல்லை.

***நிகழ்வு :***

புருதா அவளது பெயர். ஓவியம் வரைவதில் சிறப்பு வாய்ந்தவர். மிகச்சிறந்த ஓவியர் ஆகவேண்டும் என்பது இவரது ஆசை. குஜராத் பூகம்பம் பாதிக்கப்பட்டோரில் புருதாவும் ஒருவர். தனது வலக்கையை இழக்க நேரிட்டது. தனது இலட்சிய பாதையில் மிகப்பெரிய சறுக்கல். சிறுமி புருதா சொன்னாள். ஏதோ ஒரு உன்னத பணியை செய்ய கடவுளுக்கு என் கை தேவைப்பட்டது போலும்; எடுத்துக்கொண்டார்.

***சிந்தனைக்கு :***

- கஷ்டங்கள் மட்டும் இல்லையென்றால் போராடும் எண்ணமே நமக்கு இல்லாமல் போய்விடும். – பிடல் காஸ்ட்ரோ
- நிரந்தர மகிழ்ச்சிக்காக தற்காலிக வலியை ஏற்போம்
- வாய்ப்புக்காக காத்திருப்பது சோம்பேறித்தனம்
  வாய்ப்பை நழுவ விடுதல் முட்டாள் தனம்
  வாய்ப்பை உருவாக்குவது புத்திசாலித்தனம்.– A.P.J. அப்துல்கலாம்

***செபம் :***

இயேசுவே பிறரை வாழ்வில் முன்னேற்றும் ஏணியாகவும் மூழ்காமல் காக்கும் தோணியாகவும் வாழ துணைபுரியும். ஆமென்.

எங்கள் பேரில்...

---

**நான்காம் நிலை**

## தெய்வம் மண்ணகத்தில் : அம்மா

திவ்விய இயேசுவே!

“பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப்போகுமா
பால்குடிக்கும் பிள்ளையை அவள் மறப்பதுண்டோ”*-எசாயா 49:15*

*செய்தி :*

வாழ்க்கைக்கு அர்த்தம் சொல்கிற அகராதி அம்மா. அம்மாவின் ஆசிமட்டும் ஒருவருக்கு கிடைத்துவிட்டால் இந்த உலகமே அவரின் கையில் உருளும் கோலிகுண்டுதான்.

அம்மா : இது தெய்வீகத்தை மானிடத்தில் மொழிபெயர்க்கும் ஒரு உறவு. ஊண் கொடுத்தாள். உயிர் கொடுத்தாள் உலகிற்கு வந்தபின் உறவுகொடுத்தாள். சேயின் பசிபோக்க தன் பசி மறந்தாள். சேயின் நோய் நீங்க தான் மருந்துண்டாள். அன்று பாலூட்டினாள்.. இன்று பலமூட்டினாள்.

*நிகழ்வு :*

டான் ரிச்சி என்ற 84 வயது முதியவர். ஆஸ்திரேலியாவின் சிட்னி துறைமுகத்திற்கு அருகே திகேப் என்ற தற்கொலைமுனைக்கு அருகே ஒரு குடிசை கட்டி வாழ்ந்து வருகிறார். வாழ்க்கையின் விரக்தியில் தற்கொலை செய்வதற்காக திகேப் என்ற தற்கொலை முனைக்கு வரும் ஒவ்வொருவரையும் சந்தித்து, ஏன் என்னிடம் ஒரு கப் டீ குடித்துவிட்டு தற்கொலை செய்யக் கூடாது என்று கேட்பார். டீ கொடுத்து ஆற்றுப்படுத்தி மீண்டும் வாழ்வதற்கான வழியைக் காட்டி அனுப்பிவைப்பார். இதுவரை டான் ரிச்சி 160பேரை உயிர்தெழச் செய்திருக்கிறார்.

*சிந்தனைக்கு :*

- மிருகங்களை பார்க்க மனிதர்கள் வந்துசெல்லும் இடம் மிருககாட்சி சாலை.
  மனிதர்களை பார்க்க சில மிருகங்கள் வந்து செல்லும் இடம் முதியோர் இல்லம்.
- ஒழுகும் கூரையிலிருந்து காக்க நினைக்கும் தாயின் கண்ணீரில் நனைந்த குழந்தை!
  தாயின் அன்பிற்கு இதைவிட சிறந்த இலக்கணம் வேறு உண்டோ.

*செபம் :*

ஆறுதலின் தெய்வமே! உமதன்பை எமது அன்னையர்களின் வழியாக வெளிப்படுத்துகின்றீர்! வாழ்க்கைப் போராட்டங்களில் தள்ளாடும் தருணங்களில் மரியன்னை இயேசுவுக்கு வலுவூட்டியதுபோல எங்களின் அன்னையர்களுக்கு, எங்களுக்கு வலுவூட்ட அவர்களை ஆசீர்வதித்து அருள்கூறும். ஆமென்.

எங்கள் பேரில்...



## ஐந்தாம் நிலை

# ஈரம் உள்ள நெஞ்சன் – சீமோன்

திவ்விய இயேசுவே!

“சின்னஞ்சிறிய என் சகோதர் ஒருவருக்கு இவற்றை
செய்யும் போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்” *- மத்தேயு 25:40*

*செய்தி :*

அன்று இஸ்ரயேல் மக்களிடையே ஏற்பட்ட பஞ்ச காலத்தில் இறைவாக்கினர் எலியாவுக்கு உண்ண அப்பம் கொடுத்து உதவிய சாரிபாத்து கைம்பெண்ணின் செயல் சிறியது. ஆயினும் அவளின் தியாகம் பெரிது. பாரம் உள்ள சிலுவைகள் நடுவிலும் நெஞ்சில் ஈரம் உள்ள மனிதர்கள் உண்டு என்பதற்கு உயர்ந்த உதாரணம் சீமோன். ஊருக்கெல்லாம் அறிவித்துவிட்டு செய்யும் விளம்பர உதவிகளைவிட ஆபத்தில் உதவுவது சிறப்பானது.

*நிகழ்வு :*

பஞ்சம், பசி, வறுமை, தலைவிரித்தாடும் வடமாநிலம். உடல் நலம் குன்றிய மூதாட்டி ஒருவர் மருத்துவமனைக்கு செல்கிறார். அவரைப் பரிசோதித்த மருத்துவ அருட்சகோதரி; பாட்டி.. இந்த கவருல மூனு மாத்திரை வச்சிருக்கேன் கால, மதியம் ராத்திரி சாப்பிட்ட பிறகு இந்த மாத்திரைகளை சாப்பிடனும். சரியா! என்று சொன்னார். அதற்கு அந்த மூதாட்டி.. ஒரு நாளைக்கு மூணுவேளை சாப்பிட்ட காலமெல்லாம் மாறிப்போச்சு. இப்ப ஒருநேர சோத்துக்கே உசுரு ஊசலாடிக்கிட்டு இருக்கு... என்று சொன்னார்.

*சிந்தனைக்கு :*

- பசியால் ஒருவன் வாடுகிறபோது மனசாட்சியில்லாமல் சாப்பிடுபவன் திருடன் – காந்தியடிகள்.
- நீ ஏழையாக பிறந்தது உன்னுடைய தவறல்ல. மாறாக நீ ஏழையாக இறப்பது உன்னுடைய தவறு – பில்கேட்ஸ்

- உன் பின்னால் வந்து உன்னை வருணிப்பவரை விட உன் முன்னால் வந்து உன் கண்ணீரை துடைப்பவரே உண்மையான நண்பர்.
- உன் சிரிப்பின் பின்னால் உள்ள சோகத்தையும் உன் கோபத்தின் பின்னால் உள்ள அன்பையும் யாரால் உணர முடிகிறதோ அவர்கள்தான் உண்மையான நண்பர்கள்.

***செபம் :***

இயேசுவே.. இதயத்தில் இரக்கம் உள்ளவர்களால் தேவையில் உள்ளவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும், தன்னலம் துறந்து பிறர்நலம் நாடவும், உண்மைக் கிறிஸ்தவர்களாய் வாழவும் அருள்தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

### ஆறாம் நிலை

## முகவரி கொடுக்க முகம் துடைக்கும் வெரோணிக்கா

திவ்விய இயேசுவே!

“உடலைக் கொல்வதையன்றி வேறு எதையும்
கொல்ல இயலாதவர்களுக்கு அஞ்சவேண்டாம்,
நரகத்தில் தள்ள அதிகாரம் உள்ளவருக்கே அஞ்சுங்கள்”

*- லூக் : 12:5*

***செய்தி :***

தூசு படிந்த கண்ணாடிபோல் ஏசுவின் முகம். உலக அழுக்குகளின் அடையாளங்கள் இயேசுவின் முகத்தில் இரத்தமும் வியர்வையுமாய் இடம்பிடித்துக்கொள்கின்றன. முகத்தை மூடிக்கொள்கின்ற பிற்போக்கு சமுதாயத்தில் முகம்விடுத்து வெளிக்கிளம்பும் முற்போக்கு முழுமதியாய் இயேசுவின் முகம் துடைக்கும் பெண் நிலவு வெரோணிக்கா.

***நிகழ்வு :***

திருச்சி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் தி ஹோலிபேமிலி ஹேன்சனோரியம் என்ற மருத்துவமனை அருட்சகோதரிகளால் நடத்தப்படுகிறது. சமுதாயத்தில் இழிவாக பேசப்படுகின்ற, எய்ட்ஸ்



நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், குடும்பங்களைவிட்டு துரத்திவிடப்பட்ட தொழுநோயாளிகளுக்கும், உறவினர்களால் கைவிடப்பட்ட டி.பி வியாதிக்காரர்களுக்கும், சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சமூகத்தில் முகம் இழந்தோருக்கு முகம் கொடுக்கும் உன்னத பணி அங்கு நடந்தேறிக்கொண்டிருக்கிறது. அர்ப்பணத்துடன் பணிபுரியும் பல வெரோணிக்காக்கள் அங்கு வலம் வருகிறார்கள். இவர்களின் அர்ப்பண முயற்சியால் பாதிக்கப்பட்டோர்களில் பலர் ஒரு சமூகமாகவே அங்கு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

***சிந்தனைக்கு :***

- குருடனுக்கு நாம் கண்ணாக இருக்க வேண்டும்
  செவிடனுக்கு நாம் பண்ணாக இருக்க வேண்டும்
- பிறக்கும் குழந்தையை குடிலில் சென்று காணாதீர்கள் மாறாக இன்று உணவே உண்ணாமல் கட்டிலுக்கு செல்லும் ஏழைகளின் மத்தியில் காணுங்கள். – பேராயர் ஆஸ்கார் ரொமேரா.
- எவன் ஒருவனின் இதயம் ஏழைகளுக்காக கண்ணீர்வடிக்கிறதோ அவனே மகாத்மா.– விவேகாந்தர்
- 6.2 கோடி பேர் இந்தியாவில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளனர்.
- இந்தியாவில் மட்டும் 17 இலட்சம் பேர் உணவு இன்றி, உறவு இன்றி, உறங்க இடம் இன்றி பொது இடங்களில் வாழ்கின்றனர்.

***செபம் :***

இயேசுவே இச்சமுதாயத்தில் முகவரி இழந்து நிற்கும் மனிதர்களுக்கு முகவரி கொடுக்கும் மனிதர்களாக வாழவும், கறைபடிந்த முகங்களின் குறைதீர்த்து தூய்மைபடுத்த அருள்தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

### ஏழாம் நிலை

## இடரிலும் தொடரும் இயேசு

திவ்விய இயேசுவே!

“அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள்
உங்களின் எதிரியாகிய அலகை, யாரை
விழுங்கலாம் என கர்ச்சிக்கும் சிங்கம்போல் சுற்றித் திரிகிறது”

- 1 பேதுரு 5:8-9

காயமும் களைப்பும் இயேசுவை கீழே தள்ளிவிட்டன. சமூக மாற்றம் தேடுவோர் தடுமாற்றம் கொள்வது இயல்பானது. வருத்தங்கள் என்பது வாழ்வில் திருத்தங்கள் ஏற்படுத்தவே. நெருக்கடிகள் வாழ்வை நெறிப்படுத்தவே. காட்டாற்று வெள்ளத்தில் காயப்படுகிற கூழாங்கற்கள், சீவப்பட்ட சிங்காரக் கற்களாய் மேசையில் அமர்வதை நாம் பார்த்ததில்லையா?

***நிகழ்வு :***

இலண்டன் மாநகரில் ஒரு நாடகக் குழுவினருக்கு குதிரைகளை காவல்காக்கும் வேலைகளில் ஈடுபட்டார் அந்த மனிதர். அன்றொருநாள் முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கவேண்டியவர் வராத காரணத்தினால் நாடக குழுவினர் மிகுந்த பதட்டத்திற்கு உள்ளார்கள். இதைக் கவனித்த அந்த மனிதர் அந்த குழுவினரிடம் சென்று எனக்கு அந்த வாய்ப்பைத் தாருங்கள். நான் அந்த கதாப்பாத்திரத்தில் நடிக்கிறேன் என்றார்.. முதலில் ஏளனமாக பார்த்தாலும் வேறு வழியில்லாததால் அவரை நடிக்க சம்மதித்தார்கள். மேடையேறிய அந்த மனிதர் மிகப்பிரம்மாதமாய் நடித்து அசத்திவிட்டார். நாடகக்குழுவினரும் ஆச்சரியத்தில் அசந்து போனார்கள். பிறகு பல நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பு அவரை தேடி வந்தது. நாடங்களில் நடித்துக்கொண்டு தானே பல நாடகங்கள் எழுதவும் ஆரம்பித்தார். அவர் வேறுயாருமல்ல.. புகழ்பெற்ற 37 நாடகங்கள் எழுதி அனைவருடைய பாராட்டையும் பெற்ற ஷேக் ஸ்பியர் ஆவார். இன்றைக்கு எல்லா கல்லூரிகளிலும் அவருடைய நாடகங்கள் பாடத்திட்டங்களாக வைக்கப்பட்டுள்ளன.

***சிந்தனைக்கு :***

☆ ஒரு நாளில் நீ எவ்வித பிரச்சனையையும் சந்திக்கவில்லை என்றால் நீ தவறான பாதையில் பயணிக்கின்றாய். – *விவேகானந்தர்.*

☆ நாம் வழுக்கிவிடாமல் நடக்க தடம் பார்த்து நடக்கிறோம், பிறர் வழுக்கிவிடாமல் நடக்க தடம் பதித்து நடப்போம்.

☆ பாதை இல்லையென்றால்.. கலங்காதே.. உருவாக்கு. இலையுதிர் காலம் என்பது மரணமல்ல; இன்னொரு துளிர்ப்புக்கான தொடக்கம்.
– *கவிஞர் வைரமுத்து.*



***செபம் :***

இயேசுவே... இச்சமுதாயத்தில் சூழ்நிலைகள் எனக்குச் சாதமாக இல்லை என முடங்கி கிடக்காமல் தனக்கு சாதகமான சூழலை உருவாக்கிக் கொண்டு எழுந்து நடக்க அருள்தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

---

## *எட்டாம் நிலை :*

# ஆறுதலாகும் அழுகை

திவ்விய இயேசுவே!

“எருசலேம் மகளீரே! நீங்கள் எனக்காக அழவேண்டாம்
உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்”
*– மத்தேயு 23: 28*

***செய்தி :***

இது வார்த்தைக்கு வசப்படாத இதயத்தின் முனகல். எருசலேம் நகரத்துப் பெண்களின் உள்ளத்தில் உதயமாகி, விழிவெள்ளத்தில் நீச்சலடிக்கின்ற கருணையின் மொழியை காயப்பட்ட இயேசு கனிவோடு வாசிக்கின்றார். அழுகைக்கு ஆறுதல் கூறுவதுண்டு ஆனால் இங்கு அழுகையே ஆறுதலாகிறது.

***நிகழ்வு :***

எம் பேரு அமுதசாந்திங்க. ஊரு மதுர, பிறவியிலேயே எனக்கு இடது கை பாதிக்கு மேல இல்ல. முழங்கை வரை கையில்லாததால எந்த வேலையும் என்னால் செய்ய முடியல. வாழ்க்கையில முன்னுக்கு வரனும்கிற வெறி என் கூடவே இருந்துச்சி. என்னைப்போல ஊனமுற்ற எல்லாருக்கும் சாதிக்க நினைக்கிற எல்லாருக்கும் ஊனம் ஒரு தடையில்லை அப்படிங்கிறத எடுத்து சொல்லணும் என்பது என்னுடைய இலக்கு. மாற்று திறனாளிகளை வச்சி “தியாகம்னு” ஒரு அமைப்பை ஏற்படுத்தினேன். இதுவரை 3500 மாற்று திறனாளிகளை சந்திச்சி Counsilling கொடுத்திருக்கேன். கடந்த 7 வருசத்துல 178 பேருக்கு தையல்பயிற்சி கொடுத்திருக்கேன் 112 பேருக்கு Computer பயிற்சியும் கொடுத்திருக்கேன்.

எங்களது அமைபபு சார்பாக இலவச மையம அமைசசி 129 மாற்றுதிறனாளிகளை பராமரிச்சிட்டு இருக்கிறோம். 20 கிராமங்கள்ல 3,000 ஏழை குழந்தைகளுக்கு இலவசமா டியூசன் சென்டர் வச்சி அவர்களின் அறிவு கண்களை திறந்துகிட்டு இருக்கிறோம்.

இரண்டு முறை மத்திய அரசு விருதும்

8 முறை மாநில அரசு விருதும்

21 முறை மாவட்ட அளவிலான விருதும் பெற்ற அமுதசாந்தியின் வாழ்வு நம் மனக்கதவை திறக்கட்டும்.

***சிந்தனைக்கு :***

☆ கண்களைவிட கண்ணீருக்குத்தான் மதிப்பு அதிகம், ஏனெனில் கண்கள் உலகத்தை காட்டும். கண்ணீர் உள்ளத்தைக் காட்டும்.

☆ முகம் இழந்த மனிதர்களுக்கு, முகவரி மறுக்கப்பட்ட மனிதர்களுகு;கு இறைமுகமாவோம் நாம்.

☆ நாம் இறைமுகமாக மாறவேண்டும் என்பதற்காக இறைவன் மறைமுகமாக இருக்கிறார்.

☆ நம் சொற்கள் பிறரது உள்ளத்தில் விதையாக விழ வேண்டும், விஷமாக அல்ல.

***செபம் :***

ஆறுதலின் தெய்வமே இறைவா! பிறரின் துயர் துடைக்கும் மனிதர்களாக வாழவும், பிறர் கண்ணீருக்கு நாங்கள் காரணமாக இருக்காமல் வாழவும் அருள்தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

## ஒன்பதாம் நிலை

## எழுச்சிக்கான வீழ்ச்சி

திவ்விய இயேசுவே!
“பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே!
எல்லோரும் என்னிடம் வாருங்கள்
நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” *- மத்தேயு 11:28*



***செய்தி :***

பயணத்தை ஒத்திபோடுபவர் இலக்கை அடைய முடியாது. நீரோட்டமும் போராட்டமும் தொய்வில்லாமல் தொடரவேண்டும். முயற்சிகள் இல்லாவிட்டால் முயல்களும் ஆமையாகிவிடும். பாரம் படுத்தும் பாடு ஒருபுறம். பாசம் படுத்தும் பாடு ஒருபுறம். கொலைகளத்தின் கொடூர பாதையின் மத்தியில் சீமோன், மரியாள், வெரோணிக்காள் போன்ற இதயத்திற்கு இதமான உறவுகளை நெஞ்சில் நினைத்துக்கொண்டு கல்வாரி உச்சிநோக்கி கால்களை செலுத்துகின்றார். சலிப்பில்லாமல எழுந்து தம் சரித்திர பயணத்தை தொடங்குகின்றார்.

***நிகழ்வு :***

மாபெரும் தத்துவஞானி சாக்கரட்டீஸ். இவர் அனுதினமும் காலையில் தனது மிதிவண்டியை எடுத்துக்கொண்டு அருகில் உள்ள பெரிய கடைகளுக்கு சென்று வருவார். ஒவ்வொரு நாளும் கடைகளுக்கு வந்துவிட்டு எதையும் வாங்காமல் திரும்பி செல்லும் இவரை கண்காணித்த கடையின் மேற்பார்வையாளர்கள் இவரைப் பிடித்து விசாரித்தார்கள். இவ்வுலகத்தின் நுகர்வுப்பொருள்கள், வசதி வாய்ப்புகள், ஆடம்பர பொருட்கள் இவைகளினால் நான் பாதிக்கப்படாமல் வாழ்கிறேனா? அல்லது வாழ முடிகிறதா என்பதை பார்த்துவிட்டு செல்லவே இவ்வாறு வந்து போகிறேன் என்றார் சாக்ரட்டீஸ்.

***சிந்தனைக்கு :***

☆ கஷ்டத்தை நினைத்து கவலைப்பட்டால் கவலையும் உன்னை கஷ்டப்படுத்தும்

☆ 500 கிராம் தேனை சேர்க்கும் ஒரு தேனீ கூட்டம் மொத்தம் 55,000 மைல்கள் சுற்றி 20 இலட்சம் மலர்களில் அமர்கிறது.

☆ 1000 தெய்வங்களின் மீது நம்பிக்கைவைத்து தன்மேல் நம்பிக்கை வைக்காதவனைப்போல நாத்திகன் இந்த உலகத்தில் வேறு யாருமில்லை.

☆ வீழ்ச்சி ஒரு கல்லறை – இது பழைய வாழ்வின் அடக்கம்
வீழ்ச்சி ஒரு கருவறை – இது புதிய வாழ்வின் தொடக்கம்.

***செபம் :***

நுகர்வு கலாச்சார உலகில் நுகர்வு பொருள் நுகர்வு இன்பத்திற்கு அடிமையாகி வீழ்ந்திடாமல் எழுந்து நடக்க அருள்தாரும்.

எங்கள் பேரில்...

**பத்தாம் நிலை**

## உரிக்கப்படும் உரிமைகள்

திவ்விய இயேசுவே!

"என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து
என் உடைமீது சீட்டுப் போட்டார்கள்." *- யோவான் 19:24*

***செய்தி :***

ஆயக்கலையில் இன்னொன்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் அவமானங்களையும் சகித்துக்கொள்ளும்கலை. அவமானங்களை சகிக்க கற்றுக்கொண்டால் உலகமும் பிரச்சனைகளும் ஒரு பொருட்டேஇல்லை. முள்முடி - கசையடி - வசைமொழி இவையெல்லாவற்றையும் விட இயேசுவுக்கு அதிக வேதனையை உருவாக்கியது அவரது ஆடைகளைப் பறித்ததுதான்.

***நிகழ்வு :***

சேகுவேரா, ஒரு மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர். அர்ஜெண்டினா நாட்டில் மகிவும் வசதியான குடும்பத்தில் பிறந்தார்; மருத்துவப் பணி செய்து வந்தார். விடுதலை தாகம் கொண்டவர். எல்லா மக்களும் எல்லா நாட்டினரும் விடுதலைபெற்று மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்பது அவரது ஆசை. அன்னிய அடிமைத்தளத்தில் சிக்குண்டு கிடந்த கியூபா நாட்டின் விடுதலைக்காக பிடல் காஸ்ட்ரோ என்பவரோடு இணைந்து பேராடி வெற்றி கண்டவர். கியூபா வெற்றி பெற இவரே முதுகெழும்பாக திகழ்ந்ததால் அந்நாட்டின் முக்கியபொறுப்பு இவருக்கு கொடுக்கப்பட்டது. அந்நாட்டு குடியுரிமையும் இவருக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் எந்த நாடு அடிமைப்பட்டுக் கிடக்கிறதோ அதுவே எனது தாய் நாடு என்று சொன்ன



சேகுவேரா. கியூபாவை விட்டு வெளியேறி காங்கோ, பொலிவியா நாடுகளின் விடுதலைக்காக போராடினார். அங்கே ஆங்கிலேயர்களால் சுட்டுக்கொல்லப்பட்டு இறந்தார்.

***சிந்தனைக்கு :***

- ☆ இன்று இந்தியாவில் 4 கோடியே 40 இலட்சம் குழந்தை தொழிலாளர்கள் உள்ளனர்.
- ☆ சிவகாசி நெருப்பு சிதறலில் 30,000 குழந்தைகள் சென்னை குப்பை குழிகளில் 27,000 குழந்தைகள். மனித உரிமைகள் என்ன மடிந்துபோய்விட்டனவா?
- ☆ இயேசுவின் ஆடைகள் களையப்படும் நிகழ்வானது நமது ஆசைகள் களையப்பட வேண்டும் என்பதை உணத்துகிறது.
- ☆ நீ பதுக்கி வைத்திருக்கும் உணவு பசியோடு இருக்கும் ஒரு ஏழையனுடைது.
- ☆ நீ அடுக்கி வைத்திருக்கும் ஆடை ஆடையின்றியிருக்கும் ஒருவருக்குரியது. *- புனித பேசில்*

***செபம் :***

நிந்தை அவமானங்களுக்கு ஆளான இயேசுவே மனித மான்பை பேணிக்காக்கவும், பிறரன்பு என்ற ஆடையால் அனைவரையும் மகிழ்விக்கவும், மனித உரிமைகள் உரிக்கப்பட்ட சமூகத்தினர் சார்பாக குரல் கொடுக்கவும் மன வலிமையை தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

**பதினொன்றாம் நிலை**

## ஆணிகளுக்குள் அடக்கப்படும் ஆற்றல்கள்.

திவ்விய இயேசுவே!

"நீங்களே இவனை கொண்டுபோய் சிலுவையில் அறையுங்கள்.
இவனிடம் குற்றம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

*- யோவான் 19:4*

***செய்தி :***

எளியவர் ஏற்றம் பெற தன்னை ஏணியாக்கியவர் ஆணிகளுக்குள் அறையப்படுகிறார். வாழ்நாளில் வாள் எடுக்காத இந்த முள்முடி மன்னர்

காயப்பட்டதால் வரலாறே காயப்பட்டது. காயங்களையும் நியாயப்படுத்த கூடாது. நியாயங்களையும் காயப்படுத்தக் கூடாது. அகில உலகையும் ஆண்டு அளந்தவர் மூன்று ஆணிகளுக்குள் முடக்கப்படுகிறார். இலட்சியத்திற்குதான் முடக்கம் இல்லையே.

***நிகழ்வு :***

2004, டிசம்பர் 26 உலகை உலுக்கிய சுனாமி நிகழ்வு. நாகப்பட்டிணம் மாவட்டதில் மட்டும் இறந்தவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 372 பேர். இவர்களின் மனைவிகள் அனைவரும் இன்று விதவைக்கோலம். நாகப்பட்டின கடற்கரையோர கிராமங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் 15 கைம்பெண்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் தேவி என்ற 23 வயது கைபெண்ணும் ஒருவர். சிறுவயதில் திருமணம் என்ற முதல் ஆணி அறையப்படுகிறது. சிறுவயதில் கைம்பெண் என்ற 2வது ஆணி அறையப்படுகிறது. குச்சிக்காரி, கம்னாட்டடி வளர்த்த களிச்சடை என்ற பல ஆணிகளால் அவள் அறையப்படுகிறாள். இன்றும் தொடர்கிறது ஆணி அறையும் கலாச்சாரம்.

***சிந்தனைக்கு :***

☆ இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 24, 206 பாலியல் வன்முறைகள் புகார்களாக பதிவுசெய்யப்படுகின்றன.

☆ ஒவ்வொரு 22 நிமிடத்திற்கும் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு ஆளாகிறாள்.

☆ பெண்கள் வீட்டின் குத்துவிளக்கு என்பதாலா அனைவரும் திரிவைத்து கொளுத்துகிறீர்கள்?

☆ முள்ளுக்கு பயந்தால் ரோஜாவை பறிக்கமுடியாது?

இரவுக்கு பயந்தால் நிலவை ரசிக்க முடியாது?

***செபம் :***

சாந்தமுள்ள இயேசுவே, மிகவும் கூர்மையான ஆணிகளான கெட்டவார்த்தைகள், நய வஞ்சகங்கள் பழிப்புரைகளால் அனுதினமும் மற்றவரை அறைந்து கொண்டிருக்கிறோம். உம்மைப்போன்ற சாந்தமுள்ள மனநிலையைத் தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...





# உதிரம் சிந்தி உரு கொடுக்கும் இயேசு

திவ்விய இயேசுவே!

“தந்தையே உமது கையில் என் ஆவியை
ஒப்படைக்கின்றேன்.” *- லூக்கா 23:46*

***செய்தி :***

பிரிந்துபோகிற உயிருக்கு பதிலாய் மாற்று உயிர் பொருத்துகிற விந்தையை மனிதர் இன்னும் கண்டிடவில்லை. உயிருக்கு மாற்று இல்லைதான். ஆனால் இலட்சிய வீரர் உயிருக்கு மாற்றாய் கொள்கையை நேசிக்கின்றார். உயிரை விற்று கொள்கையை வாங்குகிறார். சிலருக்கு சாவின் தள்ளுபடி வாழ்வாகவும், வாழ்வின் மலிவுவிலை சாவாகவும் ஆகிவிட்டது. உயிரைவிட இயேசுவுக்கு இலட்சியம் பெரிதாகிவிட்டது. போராளியின் மரணத்தில் போராட்டம் வெற்றிபெறும் என்பது வரலாறு சொல்லித் தருகின்ற பாடம்.

***நிகழ்வு :***

65 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் தனது கருவாட்டுக் கூடையுடன் பேருந்தில் ஏற முயற்சி செய்கிறார். நடத்துனரோ... ஏய் கருவாட்டு பாத்திரம் ஒன்னும் ஏத்தக் கூடாது. கீழே இறங்கு. கீழே இறங்கறியா, இல்லையா? என்று திட்டுகிறார். அதைப் பொருட்படுத்தாமல், மூதாட்டி பேருந்தில் ஏறுகிறார். நடத்துனரோ வாய்க்குவந்தபடி திட்டுகிறார். “இறங்கடி கீழே! என்று கருவாட்டுப் பாத்திரத்தை எட்டி உதைக்கிறார். கருவாடுகளெல்லாம் கீழே கொட்டின. எம்பொழப்புள மண்ணவாரிப்போட்ட நீ நல்லாவே இருக்கமாட்ட என்று சபித்துக்கொண்டே கீழே இறங்குகிறாள் அந்த மூதாட்டி.” எங்கு மனித இனம் மான்பிடிக்கின்றதோ அங்கே மனிதம் மடிகிறது.

***சிந்தனைக்கு :***

☆ மீண்டும் துளிர்ப்போம் என்ற நம்பிக்கை செடிகளை வளரவைக்கிறது.

திரும்பவும் காய்ப்போம் என்ற நம்பிக்கை மரங்களை பூக்க வைக்கிறது. ஆனால் விழுந்தாலும் எழுவோம் என்ற நம்பிக்கை மனிதனுக்கு மட்டும்தான் குறைவாக இருக்கிறது.

☆ உலகில் தினந்தோறும் ஊட்டச்சத்தில்லாமல் இறப்போரின் எண்ணிக்கை 3000

☆ மூச்சி நின்றால் மட்டும் மரணமல்ல, உன் முயற்சி நின்றாலும் கூட மரணம் தான்.

***செபம் :***

நீதியின் அரசரே.. மனிதமும் மனிதநேயமும் செத்துப்போகாமல் இருக்க, உண்மைக்காக நீதிக்காக போராடவும், பிறருக்காக உயிரைக் கொடுக்கவும் அருள்தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

---

**பதிமூன்றாம் நிலை**

## தாயின்மடி தான் உலகம்

திவ்விய இயேசுவே!

“சிமியோன் இதோ இக்குழந்தை பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாய் இருக்கும். எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும்.”

*- லூக்கா 2:34*

***செய்தி :***

தொப்புள் கொடியில் தொடரும் பந்தம் முடிவே இல்லாமல் தொடருகிறது. இந்த உறவுக்கு மட்டும்தான் முற்றுப்புள்ளி இருப்பதில்லை. மரித்த நிலையிலும் இயேசுவை மடியில் கிடத்துவது அன்னை மரியாளுக்கு ஆனந்தமாய் இருந்தது. உயிரைக் காத்திட கொள்கைகளை விட்டுக்கொடுக்கும் கோழை மகனை இவர் பெற்றெடுக்கவில்லையே.

***நிகழ்வு :***

யாருக்காவது உதவி செஞ்சாதான் தினமும் எனக்கு தூக்கமே வருது. நான் உயர்கல்வி படிக்கல, இலக்கியமும் படிச்சதில்லை. கோயிலுக்கு போனதில்லை. தியானமும் செஞ்சதில்லை. ஆன்மீகம் தெரியாது. சாதிமதம் பாக்கறதில்லை சொத்து ஏதும் சேக்கல. நண்பர்கள் பெறுவத தவிர்ப்பதில்லை. ஆமாங்க. எம்பேரு சொக்கலிங்கம் ஈரோடு மாவட்டம் சென்னிமலை என் சொந்த ஊரு. படிச்சது நாலாம வகுப்பு. மனம நலம பாதிச்சவங்க எங்க இருந்தாலும் அவங்கல தேடி கண்டுபிடிச்சி காப்பகங்கல்ல விடுவதும், காலையில யாராவது பசியோடு இருந்தா அவங்களுக்கு சாப்பாடு வாங்கி கொடுக்கிறதும், கேன்சர், எய்ட்ஸ் போன்ற நோயினால் பாதிக்கப்பட்டவங்கள ஏதாவது ஒரு Home la கொண்டுபோய் சேக்கிறதும் தான் என் வேலை. இன்னிக்கி நேத்து இல்லங்க, சின்னவயசுலேருந்து இதுதாங்க என் வேலை. நாமக்கல், சேலம், ஈரோடு பகுதிகளில் இவரைப்பற்றி தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. சொக்கலிங்கம் பல இயேசுக்களைத் தாங்கும் தாயின் மடியே.

*- நன்றி. தி. இந்து நாளிதழ்*

***சிந்தனைக்கு :***

☆ என் கல்லறையின் மேல் உன் பெயரை எழுதி வை

நினைப்பதற்கல்ல. அங்கும் உன்னை சுமப்பதற்கு - ஒரு தாயின் வார்த்தை

☆ அளவற்ற அன்பே அன்பின் அளவுகோள் The measure of Love is measurless love.

☆ தாயின் மடிதான் உலகம்

***செபம் :***

தாயான செல்வமே! 10 மாதம் தங்கள் வயிற்றில் சுமந்த தாய்மார்களை தங்கள் வீட்டில் சுமக்கும் பிள்ளைகளை உருவாக்கித் தாரும். அன்னையர்களை நாங்கள் தாங்கும் உள்ளத்தைத் தாரும். ஆமென்.

எங்கள் பேரில்...

---

**பதினான்காம் நிலை**

## கருவறையான கல்லறை

திவ்விய இயேசுவே!

“நரிகளுக்கு வலைகள் உண்டு. வானத்துப்பறவைகளுக்கு கூடுகள் உண்டு. மனுமகனுக்கோ தலைசாய்க்கவும் இடம்இல்லை.”

*- லூக்கா 9:58*

***செய்தி :***

புதைக்கப்படுவதும்விதைக்கப்படுவதும் மண்ணுக்குத்தான் நடைபெறுகிறது. ஆனால் இரண்டிற்கும் இடையே பாரதூர வித்தியாசம் உண்டு. புதைக்கப்படுவது என்பது வேறு.. விதைக்கப்படுவது என்பதுவேறு. புதைக்கப்படுவது என்பது பூமியிலே முடங்கிப் போவது. விதைக்கப்படுவது என்பது பூமியையே பிளந்துகொண்டு வருவது. விருட்சமாகும் விதை இங்கு விதைக்கப்படுகிறது.

***நிகழ்வு :***

அமெரிக்காவில் டிரம் என்று அழைக்கக் கூடிய இயக்கத்தினர் அடிமை வியாபாரிகளாகிய இவர்கள் ஆப்பிரிக்க நீக்ரோ இளைஞர்களை வைத்து உற்பத்தி பண்ணை நடத்தி வந்தனர். இதை "நீக்ரோ உற்பத்தி பண்ணை" என்று பெயரிட்டு அழைத்தனர். உடல் வலிமை வாய்ந்த, உடல் கட்டு வாய்ந்த இளைஞர்களை பெண்களோடு உறவு கொள்ள வைத்து அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளை அடிமை வேலைக்கு பயன்படுத்தினர். மனித வளங்கள் பல இன்றும் மண்ணாக்கப்படுகின்றன.

***சிந்தனைக்கு :***

☆ உணர்வுகள் அடக்கம்செய்யப்படுகின்றபோது, உள்ளங்கள் ஊனப்படுகின்றன.

ஆனால் ஆற்றல்கள் அடக்கம் செய்யப்படுகிறபோது அது போர்க்களமாக மாறுகிறது.

☆ எங்கே பெண்கள் போற்றப்படுகிறார்களோ அங்கே இறைவன் தோன்றுகிறார். – விவேகானந்தர்.

☆ இறக்கத்தான் பிறந்தோம் அதுவரை இரக்கத்தோடு இருப்போம். – அன்னை தெரசாள்.

☆ உள்ளும் புறமும் உள்ள அழுக்கு மூட்டைகளை சவப்பெட்டிக்குள் புதைத்துவிட்டு புதுமனிதாவோம் இறைமனிதராவோம்.

***செபம் :***

ஆற்றலின் இருப்பிடமான இயேசுவே.. அன்றாடம் புதைக்கப்படும் ஆற்றல்களை ஆதாரங்களை.. நீதியை மீட்டெடுக்கும் மனப்பக்குவத்தை எங்களுக்கு தாரும். கருவறையில் தொடங்கி கல்லறை வரை நீளும் எங்கள்



வாழ்வுப் பயணத்தில் நாங்கள் இறைவனில் தூதுவர்களாய் சீர்திருத்தப் பாதையில் வெற்றிநடைபோட அருள்தாரும்.

***முடிவாக :***

| | | |
|---|---|---|
| வாழ்க்கை ஒரு சவால் | – | சந்திப்போம் |
| வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் | – | மேற்கொள்வோம் |
| ஒரு வினோதம் | – | கண்டறிவோம் |
| ஒரு சந்தர்ப்பம் | – | பயன்படுத்துவோம் |
| ஒரு போராட்டம் | – | எதிர்கொள்வோம் |
| ஒரு இலக்கு | – | எட்டிப்பிடிப்போம் |

மனித நாடகத்தில் கல்லறை என்பது கடைசிக்காட்சி. நாடகத்தை முடித்துக்கொண்டு எதார்த்த வாழ்வுக்கு திரும்புகிறவர்களை அந்தக் காட்சி கட்டிப்போட முடியாது. இரவல் வாங்கிய கல்லறையை இன்றே திருப்பிக் கொடுத்துவிட்டு வீடு திரும்புவோம். புதிதாய் பிறப்போம், புதுயுகம் படைப்போம். இறைஇயேசுவின் இறையாசீர் என்றும் நம்மோடு. ஆமென்.

## சிலுவைப்பாதை – பாடல்

சிலுவை சிலுவை கிறிஸ்துவின் சிலுவை
நம் மீட்பின் சிலுவை

1.

கொடியோரின் தீர்ப்பாலே கொடும்பார சிலுவைதனை
நெடுந்தூரம் சுமந்தீரைய்யா
கொலை களம்நோக்கி நடந்தீரைய்யா

2.

உணராமல் நான் செய்த கனமான பாரங்கள்
உம்மீது விழுந்ததைய்யா – பெரும்
வினையாக முடிந்ததய்யா.

3.

வதைப்பட்ட உடலோடு கனம்தாங்க முடியாமல்
முகம் தேய விழுந்தீரைய்யா
சித்தம் நிறைவேற பொறுத்தீரய்யா

4.

எதிர்கொண்ட அன்னையுமே உமைக்கண்டு உளம்வெம்பி
ஏங்கி அழுதாரய்யா
துன்பம் கூற இயலாதய்யா.

5.

சீரேனின் ஊர் சீமோன் சிலுவையை சுமந்துடனே
உதவிட வந்தாரய்யா
இங்கு என் மனம் விழையுதய்யா

6.

குருதி தோய்திட்ட முகத்தை சிறுமியவள்
துணியால் துடைத்தாரய்யா
அதில் திருமுகம் பதித்தீரய்யா.

7.

பாரச் சிலுவையுடன் கசையடி தாங்காமல்
மீண்டும் விழுந்தீரய்யா
அதைக் காண பொருக்காதய்யா

8.

அழுது புலம்பியே வருந்திய பெண்களுக்கு
ஆறுதல் சொன்னீரய்யா
நல்ல அறிவுரை தந்தீரய்யா

9.

கல்நெஞ்சர் இளைத்திட்ட சொல்லொன்னா கொடுமையினால்
மீண்டும் விழுந்தீரய்யா
கடும் வேதனை கொண்டீரய்யா

10.

குருதியுடல் தோய்ந்து உடலோடு சேர்ந்திட்ட
உடைகளை உரித்தாரய்யா
இரத்தம் பீறிட வதைத்தாரைய்யா



11.

இரும்பாணி கொண்டு உந்தன் திருஉடல் அறைந்திடவே
அடித்தனர் சிலுவையிலே
உம்மை வதைத்தனர் இறுதியிலே

12.

மூன்று மணிநேரம் சிலுவையில் தொங்கினையோ
இன்னுயிர் ஈந்தனையோ
இருள் ஒளிதனை சூழ்ந்தனையோ

13.

மைந்தனே மாதாவின் மடிதனில் கிடத்தினரே
பாய்ந்தது ஈட்டியய்யா
அன்னை இதயமும் சிதைந்ததய்யா.

14.

இறைமகன் திருவுடலை குகையினில் வைத்து அங்கே
அடக்கமும் செய்தானே
இயேசு பாடுகள் நிறைவானதே

